மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இலவசமாக வழக்குகளை நடத்துகின்ற வழக்கறிஞர்கள் அந்தக் குழுவில் இருக்கின்றார்கள். யார் யார் என்ற குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்தத் தகவல் தர முடியும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மிகக் கடுமையான கிராமங்களில் உள்ள வறுமைக் கோட்டின்கீழே உள்ள மக்களுக்குத்தான் அந்தக் குழுவின் உதவி தேவைப்படுகிறது. அதைப் பற்றி பூரணமாக ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மக்களுக்குத் தெரிகிறவகையில் போதிய விளம்பரம் செய்வதற்கும், அவர்களுக்கு உதவி செய்வதற்கும் அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளின் அடிப்படையில் தான் அந்தக் குழு செயல்பட வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அந்த அடிப்படையில் அதற்கு அதிகமான விளம்பரம் தருவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. அதற்காகத்தான் நிதி ஒதுக்கத்தில் விளம்பரம் மற்றும் இதர செலவுகளுக்காக என்று ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணம் ஈடேறுகின்ற வகையில் அது நடைமுறைப்படுத்தப்படும்.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்.

கு. கா. வி. எண். 43. திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி திட்டத்திற்காக கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 1980 ஜூன் மாதம் முடிய அரசு வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

(ஆ) அதில் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி திட்டத்தின்கீழ், அரசு, ஆயுள்காப்புறுதி மற்றும் பொது காப்புறுதிக் கழகங்களிடமிருந்து பெற்ற நிதியுதவியைக் கொண்டு 1980 ஜூன் திங்கள் முடிய, தலைமைச் சங்கம், பிரதமச் சங்கங்களுக்கு, வீடுகள் கட்ட கடனாக வழங்கியுள்ள தொகை ரூ. 16.43 கோடி;

(ஆ) 29,041 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன, 16,767 வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கங்களின் மூலம் அரசு கொடுத்த பணம் ஏறக்குறைய 14 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த அளவிற்கு வீடுகள் கட்டப்படவில்லை. கடன் வாங்கிய பணத்தில் வீடுகளைக் கட்டிக்கொள்ளாமல், வேறு விதத்தில் அதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா? வாங்கிய கடன்களும் திரும்பத் தரப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இந்தத் திட்டத்தின் மூலம் அரசே வீடுகள் கட்டி, அந்த ஏழைகளுக்குத் தந்தால், கடனைத் திருப்பாவிட்டால் அந்த வீடுகள் அரசுக்குச் சொந்தமானதாக அரசின் அசெட்டாக இருக்கும் என்பதாலும், அந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்திவிட்டால் அந்த வீடு தனக்கே சொந்தமாகும் என்கிற எண்ணம் அந்த மக்களுக்கு ஏற்பட்டு கடனைத் திருப்பித் தருகின்ற முறையில் வருவார்கள் என்பதாலும், அரசே அந்தக் கடன் தொகை தருவதற்கு பதிலாக, வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறைகள், முறைகேடுகள் எதுவும் அரசுக்கு இதுவரை வரவில்லை. இப்போதும் அந்த வீடுகளை தங்களுக்குச் சொந்தம் என்ற உணர்வோடுதான் கட்டுகிறார்கள். ஏனென்றால் கொடுப்பது கடன்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஏற்கெனவே ஒரு கேள்வியில் 5,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அவர்களுக்கும் சேர்த்து இப்போது பதில் சொல்கிறேன். ஹீல் ஏரியாவில்' மலைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு 5,000 ரூபாய் தருகிறோம்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, ஏற்கெனவே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது பணம் இருக்கின்ற வரையில் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது எந்த மாதத்தில் அந்த கிராமியக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்களுக்கு பணம் கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, 'அப்பக்ஸ்' சங்கத்திற்கு முன்னதாகக் கொடுக்கப்படுகிறது. அங்கிருந்து கீழே இருக்கின்ற பிரைமரி சங்கங்களுக்கு தேவைக்கு ஏற்ப வழங்குகிறார்கள். தேவையான பணத்தை பிரைமரி சங்கம் ஒரே தடவையில் வாங்கிக்கொண்டு போகிறது. ஆனால் அதை ஒரே தடவையில் வீடு கட்டுகிறவர்களுக்கு கொடுப்பதில்லை; 3 தவணைகளில் பிரித்து கொடுக்கிறார்கள்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, அமைச்சர் பதில் சொல்லும்போது 16 கோடி ரூபாய் கடனாகத் தந்திருப்பதாகச் சொன்னார்கள். அதிலே கட்டியிருக்கின்ற வீடுகள்

ஏறத்தாழ 22,000 தான். வாங்கிய கடன் பணத்திலிருந்து வீடு கட்டாமல் அதை வேறு எதற்கோ பயன்படுத்துகிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறதா? இதுவரை திருப்பி செலுத்ததாவர்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற புகார் இதுவரை அரசுக்கு வரவில்லை. கடன் வாங்கியவர்கள் 6 மாதத்திற்கு ஒருமுறை பணம் கொடுத்தால் போதும். எங்கெங்கே வீடு கட்டப்படவில்லை என்ற தகவல் இப்போது என்னிடம் இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவரவர்களே, இந்த கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் அரிசனங்களுக்கு 1,000 ரூபாய் மானியமாகவும், மீதி வட்டியில்லாத கடனாகவும் வழங்கப்படுகிறது; மற்றவர்களுக்கு வட்டி வசூலிக்கப்படுகிறது. சுமார் 5,000 ரூபாய் கடன் பெற்றால் 20 ஆண்டு காலத்தில் 11,000 ரூபாய் திருப்பி செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த வீட்டுவசதி சங்கத்தில் நூற்றுக்கு 90 பேர்களுக்குமேல் அரிசன மக்கள்தான் கடன் பெற்று வீடு கட்டுகிறார்கள் என்ற தகவல் இருக்கிறது. ஆகவே, இந்த கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களை அரிசன கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் என்று மாற்றியமைத்து, மற்றவர்களுக்கு வேறு கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் திட்டம் அரசிடம் உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீடு கட்ட என்று தனியாக திட்டம் இருக்கிறது. இது ஏழை எளிய மக்களுக்கு, குடிசைகளில் வாழும் மக்களுக்கு என்று இருப்பதால் அரிசன மக்கள் என்று இதிலே பிரித்துப் பார்க்க முடியாது. எல்லோரும் பலனடைய வேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். இருக்கிற புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது அரிசனமக்கள் அதிகமாகப் பயன் பெற்றிருக்கிறார்கள். 30—6—1980 வரையில் கட்டி முடிக்கப்பட்ட 29,041 வீடுகளில் 21,481 வீடுகளில் அரிசனங்கள் இருக்கிறார்கள். 16,767 வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன. அவற்றில் 12,705 வீடுகள் அரிசனங்களுக்கு உரியவை. எனவே அரிசனங்கள் இரு வகையிலும் பயன்பெற்று வருகிறார்கள். இருவகையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடத்துவது நல்லது என்று கருதுகிறோம்.

திரு. எஸ். சிவராமன்: தலைவரவர்களே, இந்த கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலமாக வழங்கப்படும் கடனுக்கு அரிசனங்களுக்கு மட்டும் வட்டியை தள்ளுபடி செய்கிறார்கள். ஆனால் ஏழை எளிய மக்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்கள் கடன் வாங்கினால் அதற்கு

வட்டி வசூல் செய்யப்படுகிறது. அவர்களுக்கும், அரிசனங்களுக்கு வட்டியை தள்ளுபடி செய்வதுபோல, வட்டி தள்ளுபடி செய்யப் படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, ஆண்டுக்கு 4,200 ரூபாய்க்கு குறைவான வருமானம் உடையவர்களுக்குத்தான் இந்த சலுகை தரப்படுகின்றது. அரிசனங்களுக்கு சலுகை காட்டவேண்டும் என்பதற்காக அரிசனங்களுக்கு வட்டி கிடையாது. அரிசனங்கள் அல்லாதவர்களுக்கு வட்டி உண்டு. அரிசனங்களோடு சேர்ந்து வீடு கட்டி வாழ்கிறோம் என்று சொல்லக்கூடிய அரிசனங்கள் அல்லாதவர்களுக்கும் வட்டி உண்டு.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இப்போது 29,041 வீடுகள் கட்டி இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எங்கள் வட்டாரத்தை எடுத்துக்கொண்டால் இந்தக் கடனைப் பெற்று அவர்களாகவே சொந்தமாக கட்டுவதால் நல்ல வீடுகளாகக் கட்ட முடிந்திருக்கின்றது. காண்ட்ராக்ட் முறையிலே இந்தமாதிரி நல்ல முறையிலே வீடுகள் கட்ட முடியாது என்பதை அமைச்சரவர்களும் அறிவார்கள். ஆகவே இந்தக் கடன் தொகையை கொஞ்சம் அதிகமாக உயர்த்தி அதிகமான வீடுகள் கட்டுகின்ற வகையிலே அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே இந்தக் கடனை ரூபாய் 5,000 ஆக உயர்த்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வருகிற ஆண்டில் அதிகமாக வீடுகளைக் கட்டுவதாக முடிவு எடுத்திருக்கிறோம். ஆகவே அப்போது தொகை கொஞ்சம் ஏறும். ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகின்ற கடன் தொகையை அதாவது 3,750 ரூபாயை 5,000 ரூபாயாக உயர்த்துவது என்பதைப் பொறுத்தவரையில் நிதியாதாரத்தைப் பொறுத்து பரிசீலனை செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]